**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆண்டு விசுவாவசு வருடம், ஆனி மாதம் 20 ம் நாள்

2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 4-ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>இடைக்கால மனு எண்.9/2025</u>**

**<u>in</u>**

**<u>அசல் வழக்கு எண். 35/2022</u>**

1. செல்வம்

2. க.கருப்பசாமி

3. செல்வம்

4. சபாபதி

5. சௌந்தர்ராஜ்

6. அன்பழகன்

7. முருகன் **... மனுதாரர்கள்/ வாதிகள்**

**// எதிர்//**

1. பாலாமணி

2. தாயம்மாள்

3. கன்னியம்மாள்

4. சுமதி

5. பழனிசாமி (இறப்பு)

6. சார்பதிவாளர் அவர்கள், சூலூர்

7. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்

கோவை தெற்கு

8. வட்டாட்சியர் அவர்கள், சூலூர்

9. P.செந்தில் **.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.ராதாகிருஷ்ணன், அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.D.சித்ரா, அவர்கள் முன்னிலையாகியும், 9ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.அருணாச்சலம், அவர்கள் முன்னிலையாகியும், 4, 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 5ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டபடியாலும், இந்நீதிமன்றத்தில் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14(2) ன் கீழ் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பு கூடுதல் ஆவணங்களாக தாக்கல் செய்ய ஏதுவாக அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1). மனுவின் சுருக்கம்:-**

1.1). அசல் வழக்கு வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் கடந்த 28.06.2023ம் தேதி விசாரணையானது முடிக்கப்பட்டது. மனுதாரர்கள் தாவா சொத்தில் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் புல எண்களில் 242/1 புதிய உட்பிரிவின்படி வருவாய்த் துறையினரால் வழங்கப்பட்ட 242/1A, 242/2A ல் கடந்த

2007 முதல் 2020 வரை சுமார் 7 வகையான பதிவு ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளார்கள்.

1.2). மேற்படி ஆவணங்கள் அனைத்திலும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்களின் வாரிசுகள் அவர்களுக்குண்டான பிதுராஜ்ஜியப்படி பாத்தியப்பட்ட சொத்தினை பதிவு ஆவணங்கள் மூலமாக எவ்வாறு பிரித்துக்கொண்டார்கள் என்பதற்கான சார் பதிவாளரின் ஆவணங்கள் அனைத்தும் மனுதாரர்கள்/ வாதிகளுக்கு தற்போதுதான் தெரிய வந்ததால் மேற்படி ஆவணங்கள் அனைத்தும் பொது ஆவணம் ஆகும். மேற்படி ஆவணங்கள் அனைத்தும் மனுதாரர்கள் சொத்தினை சட்டத்திற்கு புறம்பாக எதிர்மனுதாரர்கள் அபகரிக்க முற்பட்டார்கள் என்பதை தகுந்த ஆவணப்படி உறுதி செய்ய வேண்டும் என்பதால் மனுதாரர்கள்சான்றாவணங்களை இந்நீதிமன்றத்தில் வாதிகள் தரப்பில் கூடுதல் சான்றாவணங்களாக தாக்கல் செய்து, கூடுதல் சாட்சியம் கொடுக்க வாதிகள் தரப்பு சாட்சியத்தினை மறுதிறப்பு செய்து வா.சா.1 யை மறு அழைப்பு செய்ய மனுவும், கூடுதல் சான்றாவணங்கள் தாக்கல் செய்ய அனுமதி கோரும் மனுவும் தாக்கல் செய்துள்ளார்கள்.

1.3). எனவே மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கூடுதல் சான்றாவணங்களை தாக்கல் செய்ய வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**<u>2). 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர் உரையின் சுருக்கம்:-</u>**

2.1). மனு பொய்யானது, மோசடியானது. மேற்படி மனுவானது சட்டப்படியும், பொருண்மைகளின் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டவற்றை தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். வாதிகள் தரப்பில் கூடுதல் சாட்சி மற்றும் ஆவணங்கள் குறியீடு செய்ய வா.சா.1 யை

திரும்ப அழைத்து கூடுதல் விசாரணை செய்ய அனுமதி கோரி தாக்கல் செய்துள்ளனர். ஆனால் மனுதாரர்கள் தங்கள் வழக்குரையில் கூறி உள்ள சங்கதிகளை பற்றி மட்டும் கூறாமல், வழக்கில் கூறாத சங்கதிகளை சொல்லி அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்ய வா.சா.1 யை மீண்டும் விசாரணைக்கு அழைக்க அனுமதி கோருவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

2.2). இந்த மனுவுடன் கூடுதல் ஆவணங்கள் மனுதாரர்கள் கொடுத்துள்ளனர். அவை அனைத்தும் 05.07.2023 ம் தேதி மனு செய்து பெற்றதாக உள்ளது. எனவே இரண்டு ஆண்டுகள் கழித்து மேற்படி ஆவணங்களை இந்த வழக்கில் ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டும் என கூறி உள்ளதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. இரண்டு ஆண்டுகள் காலதாமதமாக ஆவணங்கள் குறியீடு செய்ய கோருவதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

3. இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. இருதரப்பிலும் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

<u>**5. தீர்வு :-**</u>

5.1). மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

5.2). மனுதாரர்கள் அசல் வழக்கானது வாதிகள் தரப்பு விசாரணை, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு விசாரணை முடிவடைந்து 9 ம் பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக 06.03.2025 ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்தது. அதே நாளில் வாதிகள் கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காகவும், மறு

விசாரணைக்காகவும், மறு திறப்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளார்கள். அசல் வழக்கு 9ம் பிரதிவாதி தரப்பு விசாரணைக்கான நிலுவையில் உள்ளது. தற்போது மனுதாரர்களால் முக்கிய ஆவணங்கள் கிடைக்கப்பெற்றது என்றும், அதில் வா.சா.1 திரும்ப அழைத்து குறியீடு செய்யப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

5.3). எதிர்மனுதாரர் தரப்பில் அனைத்தும் ஆவணங்களும் 05.07.2023ம் தேதி மனு செய்து பெற்றதாக உள்ளது. எனவே இரண்டு ஆண்டுகள் கழித்து மேற்படி ஆவணங்களை இந்த வழக்கில் ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டும் என கூறி உள்ளதை ஏற்றுக் கொள்ள முடியாது என வாதிடப்பட்டது.

5.4). இரு தரப்பும் கேட்கப்பட்டது, வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக வாதிகள் தாவா சொத்தில் 62 ஆண்டுகளாக அனுபோக சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றும், சூலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 16.09.2020ம் தேதி ஆவண எண்.8986/2020 என்றும், 14.02.2007ம் தேதி ஆவண எண்.1997/2007 என்றும் பதிவு செய்துள்ள ஆவணங்கள் செல்லாது என்றும் விளம்புகை பரிகாரம் கோரியும், தாவா சொத்தானது 242/1B ல் தான் உள்ளது என்று வருவாய் துறையினர் நில அளவை பதிவேட்டில் மாற்றி வாதிகளுக்கு வழங்க வேண்டியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.5). மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1 யை திரும்ப அழைத்து அவர் மூலமாக குறியீடு செய்யப்பட வேண்டும் என மனு தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு அவசியமானதாகவும், அது தாவா சொத்து பற்றி பிரச்சினையை தீர்மானிக்கவும், அசல் வழக்கில் இறுதி முடிவை எட்ட அவசியமான ஆவணங்களாகும். எனவே நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்வுகாண்கிறது.

**முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ம் ஆண்டு ஜுலை மாதம் 4 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சூலூர்.**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை.

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சூலூர்.**

Draft/ Fair Order
I.A.No.9/2025
O.S.No.35/2022
Dated:04.07.2025
DMC, Sulur